# தமிழர்களை அழிக்க ஆரியர்கள் போட்ட விதை

11

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்


வரலாற்றுத் தொடர்

வைதீக இந்து மதத்தினர் பௌத்தர்களோடும், சமணர்களோடும் சமய வாதம் புரிந்த காலத்தில் அவர்களது மதம் கோட்பாட்டு ரீதியில் நிறுவன மயப்படுத்தப்பட்ட ஒரு மதமாக இருக்கவில்லை. வேதங்களினதும், உபநிடதங்களினதும் அடிப்படையிலான சடங்குகளையும், சாத்திர சம்பிரதாயங்களையும் அடிப்படையாகக் கொண்ட பிராமணிய மதமாகவே அது இருந்தது. தத்துவ விவாதம் என்று வந்த போது பிறப்பையும், குலத்தொழிலையும் கொண்டு மனிதனை மனிதன் இழிவு செய்த அவர்களது வர்ணக் கோட்பாடும், பெண்களுக்கு எதிரான உடன் கட்டை ஏறல் பாலிய விவாகம், விதவைத் திருமண மறுப்பு முதலான கறாரான அடிமைத் தனங்களும் பெரும் தாக்குதலுக்குள்ளாகின.

பௌத்தர்களோடும், சமணர்களோடும் நேரடி விவாதம் என்று வந்த போது இவர்களால் அவற்றை நியாயப்படுத்த முடியவில்லை. தங்களது தத்துவார்த்தப் பலவீனத்தை உணர்ந்த இவர்கள் தந்திரமாகவும், சில சமயங்களில் பலாத்காரமாகவும் பௌத்தர்களையும், சமணர்களையும் அழிக்க முயற்சித்ததோடு, தங்களையும் கோட்பாட்டு ரீதியான ஒரு மதமாக நிறுவனப்படுத்த முனைந்தனர்.

### ஆதிசங்கரரும் இராமானுஜரும்

இதற்கான முதல் முயற்சி கி.பி 6 ம் நூற்றாண்டில் இன்றைய கேரளாவில் உள்ள காலடி என்னும் கிராமத்தில் பிறந்த



ஆதிசங்கரர்

ஆதி சங்கரால் தொடங்கி வைக்கப்பட்டது. அத்வைத சித்தாந்தத்தை உருவாக்கிய இவரே இன்றைய வைதீக இந்து மதத்தின் பிரிவுகளான சைவம், வைஷ்ணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம் என்கின்ற ஐவகை பிரிவுகளின் கோட்பாட்டு ரீதியான ஸ்தாபகராவார்.

இவரையடுத்து வந்த கும்பகோணத்தில் பிறந்த இராமானுஜர் இவரது அத்வைத கோட்பாட்டை விமர்சனம் செய்து விசிட்டாத் வைதக் கோட்பாட்டை முன் வைத்தார். இராமானுஜரது இந்தக் கோட்பாடு வைஷ்ணவ மதப் பிரிவினரது தலையாய கோட்பாடாக இன்று வரை போற்றப்படுகிறது.

தென்னாட்டைச் சேர்ந்த (கேரளா உட்பட்ட அன்றைய தமிழகம்) இந்த இருவரும் வைதிக இந்து மதத்திற்கு புத்துயிரூட்டி அதை கோட்பாட்டு ரீதியாக நிறுவன மயப்படுத்தப்பட்ட மதமாக்க எடுத்த இந்த முயற்சியில், தமிழகத்தில் நிலவிய பௌத்தமும், சமணமும் அழிக்கப்பட்டது மட்டுமல்ல, தமிழர்களுடைய சிவநெறியும், மால் வழிபாடும், முருகு அல்லது வேலன் வழிபாடும், அம்மன் (தாய்த் தெய்வம்) வழிபாடு, அல்லது காளி வழிபாடும் கூட அழிக்கப்பட்டுவிட்டது.

### அழிவுக்கான விதை

பிச்சாண்டியும், ஆலமரத்தடிவாசியுமான சிவனும் மலைக் குன்று இருந்த இடமெல்லாம் குடியிருந்த முருகனும் இடையர்களின் குலதெய்வமான கருமை நிறக் கண்ணனும், துட்டர்களை அழித்து தன் பக்தர்களைக் காக்கும் பாமர மக்களின் காவல் தெய்வமான காளியும், மகா தேவனாகவும், மகா விஷ்ணுவாகவும், ஸ்கந்தனாகவும், சிறீபார்வதியாகவும், ஆரிய பார்ப்பனியர்களைத் தவிர மற்றவர்கள் செல்வதற்கு அனுமதிக்காத கற்பக் கிருகங்களுக்குள் (மூலஸ்தானம்) முடக்கப்பட்டபோது தமிழினத்தை சாதியக் கூறுகளாகப் பிளவு படுத்தி தமிழர்களைக் கொண்டே தமிழர்களை அழிப்பதற்கான விதை ஆரியர்களால் போடப்பட்டு விட்டது.

இவ்வாறு திட்டமிட்டு தமிழர் மதத்தை அழித்து ஆரியர் மதத்தை தமிழர் மதமாக்கி குலத்தொழிலைக் கொண்டும் பிறப்பைக் கொண்டும் மனிதனை மனிதன் இழிவு செய்யும் வர்ணக் கோட்பாட்டை பூர்வ ஜென்ம பலன் என்றும், கர்ம வினைப் பலன் என்றும் சொல்லி தமிழர்கள் தலையில் மிளகாய் அரைத்த அதே நேரத்தில் இந்த வர்ணக் கோட்பாட்டுக்கு எதிரான பௌத்தமும், சமணமும் அழிக்கப்பட்டது. முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.



சிவ வழிபாடு

வைதீக இந்து மதம், பௌத்தம், சமணம் எல்லாம் தோற்றம் பெற்றது வடநாட்டில். ஆதி சங்கர் இராமானுஜர் காலம் வரை தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் வடநாடு முழுவதிலும் இந்த மதப்பிரிவுகள் இருந்தன. ஆனால் பௌத்தத்திற்கும் சமணத்திற்கும் எதிரான யுத்தமும், அதை அழிப்பதற்கான முயற்சிகளும் தென்னாட்டில் குறிப்பாக தமிழ் நாட்டில் மட்டும் தான் அதிகளவுக்கு நடந்திருப்பதும் வைதீக இந்து மதத்தை கோட்பாட்டு ரீதியான மதமாக மாற்ற எடுத்த முயற்சியும் தென்னாட்டில் தான் நடந்திருக்கின்றது என்பதும் கூட கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

### உண்மையான நோக்கம்

உண்மையில் தென்னாட்டில் வாழ்ந்த திராவிட மக்களுடைய சமய நெறியும் தென்னாட்டில் குறிப்பாக ஆந்திராவிலும் தமிழ் நாட்டிலும் தோற்றம் பெற்ற பௌத்த சமண அறிஞர்களது தத்துவ விளக்கங்களும் ஆரியர்களான வைதீக பார்ப்பனர்களது நலன்களும் அதைக் கட்டிக்காக்கும், வர்ணக் கோட்பாட்டுக்கும் பெரும் அச்சுறுத்தலாகவே இருந்தது.

தெற்கே உருவான இந்த அச்சுறுத்தல் வடக்கேயும் பரவி தங்களுடைய இருத்தலை அழித்து விடும் என்று அவர்கள் பயந்தார்கள். எனவே அச்சுறுத்தல் உருவான இடத்திலேயே அதற்கெதிரான தங்களது போரை நடாத்தி தங்களது இருப்பை உறுதிப்படுத்திக் கொண்டார்கள். இந்த அடிப்படையில்தான் ஆரிய பார்ப்பனர்களின் வழிவந்த (தமிழ்நாட்டில்) இராமானுஷர், ஆதி சங்கரர் ஆகியோரது நடவடிக்கைகளைப் பார்க்க வேண்டும்.

இந்த இருவரும் கௌதம புத்தரின் போதனைகளில் இருந்து பல பகுதிகளை தங்களது தத்துவத்தில் சேர்த்துக் கொண்டது மட்டுமல்லாது கௌதம புத்தரை மகாவிஷ்ணுவின் அவதாரமாக்கவும் முனைந்தனர். இந்த முயற்சி தமிழ் நாட்டில் பலம் பெற்றிருந்த மகாயான பௌத்தத்தை அவர்களது வைதீக மதத்திற்குள் கலந்து போகச் செய்தது.

தந்திரமாக நடந்த இந்த முயற்சிகளுக்கு அப்பால் பலாத்காரமாகவும் பௌத்தத்தை அழிக்க முயற்சிகள் நடந்தன. பல்லவர் ஆட்சிக் காலத்தில் நடந்த இந்த முயற்சியால் ஏராளமான பௌத்தர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதாகவும் தப்பி ஓடியதாகவும் சொல்லப்படுகின்றது.

### இலங்கையில் பாதுகாப்பு

தமிழ் நாட்டில் நடந்த, ஆரியப் பார்ப்பனிய வழிவந்தோர் தலைமையில் நடந்த இந்தப் பௌத்த எதிர்ப்பு யுத்தம் இலங்கையிலும் பாதிப்பை ஏற்படுத்தியது. தமிழ்நாட்டில் பௌத்தத்திற்கு எதிராக நடந்த போரைத் தடுக்க இலங்கையில் இருந்து சென்ற பல பௌத்த துறவிகள் முயன்றதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் அவையெல்லாம் முடியாத நிலையில் தென்னாட்டுப் பௌத்தர்கள் அக்காலத்தில் (கி.பி.6) அனுராதபுரத்தை ஆட்சி செய்த தேரவாத பிரிவு மன்னனான தாதுசேனனிடம் தஞ்சமடைந்ததாக நம்பப்படுகின்றது.

ஏற்கனவே பாளி மொழிப் பாரம்பரியம், சமஸ்கிருதம் அல்லது தமிழ் மொழிப் பாரம்பரியம் என்ற அடிப்படையில் முரண்பாடுகளைக் கொண்டிருந்த தேரவாதப் பௌத்தமும் மகாயான பௌத்தமும் இந்த சம்பவத்தோடு தத்துவார்த்த மோதலுக்கு அப்பால் மொழி ரீதியான மோதலுக்குத் தள்ளப்பட்டதாக அறியப்படுகின்றது.

### கேரளாவில் ஈழவர்கள்

தமிழ் நாடே இந்தியாவில் பௌத்தம் அழிந்து போவதற்கு காரணமாக இருந்ததால் தமிழ் மொழியும் தமிழர்களது வழிபாட்டு முறைகளும் பௌத்தத்திற்கு எதிரானவை என்று கருதப்படும் நிலை உருவாகியது. தமிழ்ப் பாரம்பரியத்தைக் கொண்ட மகாயானப் பிரிவினரின் அபயகிரி விகாரை தகர்த்துத் தீ மூட்டி அழிக்கப்பட்டது. அனுராதபுரத்திலும் உருகுணையிலும் இருந்த பௌத்தர்கள் அல்லாதவர்கள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டு அவர்கள் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். இவ்வாறு விரட்டப்பட்டவர்களில் ஒரு பகுதியினர் உத்தர தேசமான குடா நாட்டுக்கு வந்தனர். இன்னொரு பிரிவினர் குடாநாட்டிலும் பௌத்தம் நிலவுவதாக அஞ்சி அன்றைய சேர நாடான இன்றைய கேரளாவுக்குச் சென்றனர். இவ்வாறு சென்றவர்கள் இன்று அங்கு ஈழவர்கள் என அழைக்கப்படுகின்றனர். கேரள சமூக அமைப்பில் தாழ்த்தப் பட்டவர்களாகவும், சாதி அடிப்படையில் பெரும்பான்மையினராகவும் (30 வீதம்) இருக்கும் இவர்களது பண்பாடு, கலாச்சாரம் வதிவிட அமைப்பு அனைத்துமே கரையோரச் சிங்களக் கலாச்சாரத்தை ஒத்ததாகவே உள்ளது. என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்று.

1. நா.வானமாமலை தமிழர் பண்பாடும் தத்துவமும்.
2. பேராசிரியர் .ஆ.வேலுப்பிள்ள்ளை தமிழர் சமய வரலாறு.
3. பேராசிரியர். நா. இராஜமாணிக்கம் தமிழர் நாகரீகமும் பண்பாடும்.
4. மு.திருநாருக்கரசு இலங்கை இனப்பிரச்சனைகளின் அடிப்படையில்.
5. கேரளத்தில் ஈழவர்கள் பேராசிரியர் வேணுகோபாலன் நாயர்.

- நக்கீரன்